இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 168 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 15 – திங்கள்கிழமை 29 ஜனவரி 2024 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 168 : Thiruvalluvar Year - 2055 - Thai 15 - Monday 29 January 2024 - Madurai 8 Pages ₹ 5.00

## ஐரோப்பிய நாடுகளின் கவனத்தை ஈர்த்து பெருமளவு முதலீடுகளை தமிழ்நாட்டுக்கு கொண்டுவரவே இந்தப் பயணம்!

# ஸ்பெயினில் முதலீட்டாளர்கள் மாநாடு!

## 8 நாள்கள் வெளிநாட்டுப் பயணம் புறப்படும்முன் - விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜன. 29 -**

**ஸ்பெயின் நாட்டில் 8 நாள்கள் அரசு முறைப் பயணம் மேற்கொண்டு, சென்னையிலிருந்து நேற்று முன்தினம் மாலை புறப்படும் முன், விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "ஐரோப்பிய நாடுகளின் கவனத்தை ஈர்த்து பெருமளவு முதலீடுகளை தமிழ்நாட்டுக்குக் கொண்டுவரவே இந்தப் பயணம்!" என்று குறிப்பிட்டார்.**

**மேலும் முதல்வர் அவர்கள் தமது பேட்டியில், "ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகளைப் போன்றே, ஸ்பெயின் நாட்டிலும், முதலீட்டாளர்கள் மாநாடு நடத்த இருக்கிறேன். ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த முன்னணி முதலீட்டாளர்கள், வணிக அமைப்புகள், தொழில் முனைவோர் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள இருக்கிறார்கள்" என்று அறிவித்தார்.**

*முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (27.1.2024) மாலை, சென்னை விமான நிலையத்தில், தமிழ்நாட்டிற்குப் புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக அரசு முறைப் பயணமாக ஸ்பெயின் நாட்டிற்குப் புறப்படுவதற்கு முன்பாக செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியதாவது :-*

முதலில் அனைவருக்கும் நன்றி.

அனைவரின் ஆதரவோடு, நமது திராவிட மாடல் அரசின் 1 டிரில்லியன் பொருளாதார இலக்கை எட்டிவிடும் முயற்சிகளில், 2024ஆம் ஆண்டு தொடக்கமே உலக முதலீட்டாளர்கள் மாநாடு வெற்றியாக அமைந்தது.

**பிப்.7 - சென்னை திரும்பிடல்!**

அதனைத் தொடர்ந்து இன்று பயண நாட்கள் தவிர்த்து 8 நாட்கள் பயணமாக ஸ்பெயின் செல்கிறேன். பிப்ரவரி 7ஆம் தேதி காலை சென்னை திரும்புகிறேன்.

**கடந்த இரண்டு பயணங்கள் மூலம் ரூ.7,442 கோடி முதலீடு ஈர்ப்பு!**

என்னுடைய கடந்தகால வெளிநாட்டுப் பயணங்களைப் பொறுத்தவரை, கடந்த 2022ஆம் ஆண்டு, தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, ஐக்கிய அரபு நாடுகள் சென்றிருந்தேன். அந்தப் பயணத்தில், 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகளை உருவாக்கும் 6 ஆயிரத்து 100 கோடி ரூபாய் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

அதேபோல, 2023ஆம் ஆண்டு மே மாதம் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு சென்றதில், 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகளை உருவாக்கும் ஆயிரத்து 342 கோடி ரூபாய் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

இந்த இரண்டு பயணங்கள் மூலமாக, 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கும் 7 ஆயிரத்து 442 கோடி ரூபாய்க்கான முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**அரசின் வேகமான செயல் வடிவம்! பெரும் நிறுவனங்கள் பேரார்வம்!**

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு வேகமாக செயல்வடிவம் கொடுத்ததால் பல நிறுவனங்கள், தங்களின் தொழிற்சாலைகளை தமிழ்நாட்டில் நிறுவத் தொடங்கியிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஓம்ரான் மற்றும் மிட்சுபிஷி போன்ற நிறுவனங்கள், தங்களின் தொழிற்சாலைகளை நிறுவத் தொடங்கி விட்டார்கள்.

**கோவையில் - 'லூலூ குழுமம்' திட்டத்தைத் தொடங்கியது!**

குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட இரண்டே மாதங்களில், 'ஓம்ரான்' நிறுவனத்தின் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இதேபோன்று, சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த கேப்பிடாலேண்டு நிறுவனத்தின் ஐ.டி. பூங்காவை சமீபத்தில் தொடங்கி வைத்தேன்.

**இந்தியாவில் முதலீடுகளை மேற்கொள்ள தமிழ்நாடுதான் உகந்த மாநிலம்!**

ஐக்கிய அரபு நாடுகளில் மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், லூலூ பன்னாட்டுக் குழுமம், கோயம்புத்தூரில் தன்னுடைய திட்டத்தைத் துவங்கியிருக்கிறது.

"ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகளைப் போன்றே, ஸ்பெயின் நாட்டிலும், முதலீட்டாளர்கள் மாநாடு நடத்த இருக்கிறேன். ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த முன்னணி முதலீட்டாளர்கள், வணிக அமைப்புகள், தொழில் முனைவோர் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள இருக்கிறார்கள்".

இந்த மாநாட்டில், தமிழ்நாட்டில் நிலவும் சாதகமான முதலீட்டுச் சூழல் பற்றியும், தமிழ்நாட்டின் கட்டமைப்பு வசதிகள், மனிதவள ஆற்றல் போன்றவற்றின் சிறப்பம்சங்களையும் எடுத்துக்கூறி, இந்தியாவில் முதலீடுகளை மேற்கொள்ள தமிழ்நாடுதான் உகந்த மாநிலம் என்று, அந்த நாட்டு முதலீட்டாளர்களுக்கு எடுத்துரைக்க இருக்கிறேன்.

**'இன்வெஸ்ட் ஸ்பெயின்' அமைப்புடன் நேரடிப் பேச்சுவார்த்தை!**

இந்தப் பயணத்தின்போது, ரோகா (ROCA) மற்றும் கெஸ்டாம்ப், உட்பட சில பெரும் தொழில் நிறுவனங்களுடனும், 'Invest Spain' எனும் முதலீட்டு அமைப்புடனும் நேரடிப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

இந்தப் பயணத்தின் மூலமாக, ஐரோப்பிய நாடுகளின் கவனத்தையும் ஈர்த்து, அந்த நாடுகளில் இருந்தும் முதலீடுகளை பெருமளவில் ஈர்க்க முடியும் என்று நம்புகிறேன்.

எனவே, உங்கள் அனைவரின் வாழ்த்துக்களோடு இந்தப் பயணம் வெற்றி பெறும் என்று நம்புகிறேன்.

**கேள்வி**: – *உங்கள் வெளிநாட்டுப் பயணம் வெற்றி பெற வாழ்த்துகள். பெரிய நிறுவனம் ஏதாவது வர வாய்ப்பு இருக்கிறதா? எவ்வளவு முதலீடுகள் எதிர்பார்க்கப்படுகிறது?*

**முதலமைச்சர்**:- நான் பயணம் முடித்துவிட்டு வந்த பிறகு விளக்கமாகச் சொல்கிறேன்.

*இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சென்னை விமான நிலையப் பேட்டியின் போது குறிப்பிட்டார்.*




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (27.1.2024) சென்னை விமான நிலையத்தில், தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக அரசு முறைப் பயணமாக ஸ்பெயின் நாட்டிற்குப் புறப்படுவதற்கு முன்பாக செய்தியாளர்களைச் சந்தித்தார்.



தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக அரசு முறைப் பயணமாக ஸ்பெயின் நாட்டிற்குப் புறப்பட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (27.1.2024) சென்னை விமான நிலையத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் வழியனுப்பி வைத்தார்கள்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 29-01-2024

# எய்ம்ஸ் என்னாச்சு?

**ஜனவரி 27 - மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டப்பட்ட நாள். பொதுவாக மருத்துவமனையைக் கட்டித் திறந்தால் திறந்த நாளைக் கொண்டாடுவார்கள். பா.ஜ.க.வின் எய்ம்ஸ்க்கு என்ன பெருமை என்றால் பல ஆண்டுகளாக அடிக்கல் நாட்டும் நாளையே கொண்டாட வைத்துக் கொண்டு இருக்கிறது.**

**2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக மதுரைக்கு வந்து எய்ம்ஸ் மருத்துவமனைக்கான அடிக்கல்லை பிரதமர் நரேந்திரமோடி வைத்தார். 2020,2021,2022,2023 ஆகிய ஆண்டுகள் முடிந்து விட்டது. 2024 ஆம் ஆண்டும் தொடங்கிவிட்டது. அவரது ஐந்தாண்டு ஆட்சியும் முடியப் போகிறது. அடுத்த தேர்தலும் வந்துவிட்டது. எய்ம்ஸ் தான் வந்த பாடில்லை.**

நேற்றைய தினம் சமூக வலைத்தளங்களில், 'எய்ம்ஸ் என்னாச்சு?' என்பதே மிகப்பெரிய பேசு பொருளாக ஆகி இருந்தது. சமூக ஊடகங்களில் எழுப்பப்பட்ட கேள்விகள் வலிமையானவை.

★ மதுரையில் 2019 ஜனவரி 27 ஆம் தேதி பிரதமர் மோடி அடிக்கல் நாட்டி 5 வருஷம் ஆச்சு. எய்ம்ஸ் என்னாச்சு?

★ முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டி 15 மாதங்களில் திறப்புவிழா கண்டது கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை. பிரதமர் மோடி அடிக்கல் நாட்டி ஐந்து ஆண்டுகள் ஆச்சு. எய்ம்ஸ் என்னாச்சு?

★ இமாசலப் பிரதேசம் பிலாஸ்பூரில் 1,470 கோடி ரூபாய் மதிப்பில் 2017 அக்டோபரில் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டிய எய்ம்ஸ் கட்டி முடிக்கப்பட்டு 2022 அக்டோபர் 5 ஆம் தேதி திறந்தும் வைத்து விட்டார். ஆனால் மதுரை எய்ம்ஸ் இன்னும் பொட்டல் காடாகவே காட்சியளிக்கிறது.* மதுரை எய்ம்ஸ் அடிக்கல் நாட்டு விழாவில் பேசிய பிரதமர் மோடி, 'தமிழ்நாட்டுக்கு இன்னும் நிறைய திட்டங்களை வழங்குவோம்' என்றார். ஒரு எய்ம்ஸ் மருத்துவமனைக்கே வழியில்லாத கையில்தான் நிறைய வடைகளைச் சுட்டார்.

★ 'மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையில் 95 சதவிகித பணிகள் முடிவடைந்துவிட்டன' என்று பா.ஜ.க. தலைவர் ஜே.பி.நட்டா உள்ளிட்டோர் கலர் மத்தாப்புகளைக் கொளுத்திக் ண்டே இருந்தார்கள். கடைசி வரை எய்ம்ஸ் வரவே இல்லை.

★ ஐந்தாண்டுகளில் ஒரு செங்கலைக் கூட மோடி அரசு எடுத்து வைக்கவில்லை.

★ 2015 - நிதிநிலை அறிக்கையில் எய்ம்ஸ் மருத்துவமனைக்கான அறிவிப்பு வெளியிடப் பட்டது. அதே நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட பஞ்சாப் பதிண்டா எய்ம்ஸ் மருத்துவமனை 2019 ஆம் ஆண்டே செயல்பட ஆரம்பித்துவிட்டது. மதுரையிலோ இன்னும் கட்டுமானப் பணிகள் தொடங்கவே இல்லை.

- இவை அனைத்தும் சமூக ஊடகங்களில் வலம் வருவோர் கேட்ட கேள்விகள் ஆகும். இதற்கெல்லாம் பா.ஜ.க. வாய்கள், பதில் சொல்லாது. சொல்ல முடியாது.

அடிக்கல் நாட்டியதுதான் 2019. அதனை வைத்துத்தான் ஐந்து ஆண்டுகளைக் 'கொண்டாடிக்' கொண்டு இருக்கிறோம். உண்மையில் பத்து ஆண்டு விழாவைத்தான் கொண்டாட வேண்டும். ஏனென்றால் தமிழ்நாட்டில் எய்ம்ஸ் நிறுவுவதற்கான பா.ஜ.க.வின் ஏமாற்று நாடகங்கள் 2014 ஆம் ஆண்டு அவர்கள் ஆட்சிக்கு வந்தபோதே தொடங்கிவிட்டது.

'தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பதற்கான இடத்தை தேர்வு செய்யுங்கள்' என்று முதன்முதலாக 19.6.2014 அன்று தமிழ்நாடு அரசுக்கு ஒன்றிய அரசு கடிதம் அனுப்பியது. இரண்டு இடங்களைத் தேர்வு செய்து 31.0.2014 அன்று தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியது.

28.2.2015 அன்று ஒன்றிய நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த நிதிஅமைச்சர் அருண் ஜெட்லி, 'மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமையும்' என்று சொன்னார்.2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மதுரை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைய நான்கு மாத காலக்கெடுவை நீதிமன்றம் விதித்தது.

2018 ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் தேதி எய்ம்ஸ் மருத்துவமனைக்கு பிரதமர் அடிக்கல் நாட்டுவார் என்று தேதியே குறித்தார்கள். அடிக்கல் நாட்டப்பட வில்லை. 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் வந்ததால், 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் தேதி அடிக்கல் நாட்டினார் பிரதமர். எனவே, எய்ம்ஸ் ஏமாற்றும் சுழியை 2015 ஆம் ஆண்டே போட்டுவிட்டது பா.ஜ.க.

**மாநில அரசிடமிருந்து 224.24 ஏக்கர் நிலம் ஒன்றிய அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. திட்ட மதிப்பீடு ஆயிரத்து 977 கோடி ரூபாயாக அதிகரித்த நிலையில், ஓராண்டு கழித்து ஜப்பான் நிறுவனத்திடம் இருந்து கடன் பெறும் ஒப்பந்தம் கையெழுத்தானது. 82 சதவீதம் நிதியான ஆயிரத்து 627 கோடி ரூபாய் ஜப்பானின் ஜைய்கா நிறுவனத்திடம் இருந்து கடன் பெறப்படும். எஞ்சிய 18 சதவிகிதம் மட்டுமே ஒன்றிய அரசு வழங்கும் என கூறப்பட்டது. மற்ற மாநிலங்களில் அமைக்கும் மருத்துவமனைகள் எல்லாம் பா.ஜ.க. அரசின் நிதியில் இருந்து அமைக்கப்படுமாம். தமிழ்நாட்டில் அமையும் எய்ம்ஸ்க்கு மட்டும் ஜப்பான் நிதியை எதிர்பார்ப்பார்களாம். தமிழ்நாடு என்ன ஜப்பானில் இருக்கிறதா? இதற்கு மட்டும் ஏன் ஓரவஞ்சனை?**

மக்கள் எழுப்பும் கேள்வி இதுதான்...

★ **மதுரைக்கு அருகே கீழடி அருங்காட்சியகம்**

★ **கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம்**

★**கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்** - ஆகிய மூன்றையும் மூன்று ஆண்டுகளுக்குள் மதுரைக்கு உருவாக்கிக் கொடுத்துள்ளார் 'திராவிட மாடல்' முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். ஒரே ஒரு எய்ம்ஸ் மருத்துவமனையைக் கூட கொண்டு வராத பிரதமர் நரேந்திரமோடிதான் வாக்குக் கேட்டு வரப்போகிறார்.

**எய்ம்ஸ் என்றால் 'ஏமாற்றுதல்' என்ற பொருளை இப்போது தருகிறது. அதைத்தான் தமிழ்நாட்டு மக்களுக்கும் பா.ஜ.க.வுக்கு வாரி வழங்குவார்கள்.**

●●

## தமிழ்நாட்டில் மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஜன. 29–

தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். தமிழகத்தில் அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில இடங்களில் லேசான பனிமூட்டத்திற்கு வாய்ப்பு உள்ளது.

தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். தமிழகத்தில் அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டத்திற்கு வாய்ப்பு உள்ளது.

31.01.2024 முதல் 02.02.2024 வரை: தென் தமிழகம், டெல்டா மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

03.02.2024: தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும்.

இன்று (29.01.2024): தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் இரவு / அதிகாலை வேளையில் உறை பனி ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.01.2024) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை (TN Champions Foundation) நிதியிலிருந்து செஸ் கிராண்ட் மாஸ்டரும், அர்ஜுனா விருது பெற்றவருமான செல்வி.ஆர்.வைஷாலி அவர்களுக்கு சர்வதேச போட்டிப் பயிற்சிக்கான செலவினத் தொகை ரூ.15,00,000/க்கான காசோலையினை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.

### தேர்வு எழுத விடமாட்டேன் என மாணவர்களுக்கு கல்லூரி முதல்வர் பகிரங்க எச்சரிக்கை!

# ஆளுநர் ஆர்.என்.ரவி நிகழ்ச்சியில் பங்கேற்க மறுத்த மாணவிகள்!

## தனியார் கல்லூரி முதல்வரின் மிரட்டல் ஆடியோ வெளியாகி பரபரப்பு!

நாகை, ஜன. 29–

நாகையில் ஆளுநர் ஆர்.என்.ரவி பங்கேற்கும் நிகழ்ச்சியில் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும் என்று தனியார் நர்சிங் கல்லூரி மாணவிகளை, கல்லூரி முதல்வர் மிரட்டும் ஆடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

நாகையில் ஆளுநர் ஆர்.என்.ரவி பங்கேற்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தனியார் கல்லூரி மாணவிகள் வலுக் கட்டாயமாக அழைத்து வரப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. பா.ஜ.க. நாகை மாவட்ட தலைவர் கார்த்திகேயனுக்கு சொந்தமான நர்சிங் கல்லூரியில் பயிலும் மாணவிகள், ஆளுநரின் நிகழ்ச்சியில் பங்கேற்க வேண்டும் மிரட்டப்பட்டுள்ளனர். ஆளுநர் ஆர்.என்.ரவியை வரவேற்க காலை 6 மணிக்கே வர வேண்டும் என கல்லூரி முதல்வர் இளவேந்தன், மாணவர்களை மிரட்டும் ஆடியோ வெளியாகி உள்ளது.

ஆனால், நிகழ்ச்சியில் மாணவ, மாணவிகள் வராததால் ஆத்திரமடைந்த கல்லூரி முதல்வர், எதிர்காலத்தில் எப்படி தேர்வு எழுதுகிறீர்கள் என்று பார்க்கிறேன் என பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

### மேற்கு வங்கத்தில்

# ராகுல் காந்தியின் நீதிப்பயணம் மீண்டும் தொடக்கம்!

## நீதிப்பயணத்தில் பங்கேற்கும்படி மம்தாவுக்கு கார்கே கடிதம்!

கொல்கத்த, ஜன. 29–

காங்கிரஸ் முன்னணித் தலைவர் ராகுல் காந்தி இரண்டு நாட்கள் ஓய்வுக்குப் பிறகு மேற்கு வங்கத்தில் நேற்று நீதிப்பயணத்தை தொடங்கினார்.

மணிப்பூரில் கடந்த 14ம் தேதி இந்திய நீதிப் பயணத்தை காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல் காந்தி தொடங்கினார்.

இந்த பயணம் நாகாலாந்து, அசாம் மாநிலங்களைக் கடந்து மேற்கு வங்கத்தில் நுழைந்துள்ளது. கடந்த 25ம் தேதி கூச்பெகரில் நடைபெற்ற சாலை பேரணியில் பங்கேற்ற ராகுல் காந்தி, 2 நாட்கள் ஓய்வெடுத்துக் கொண்டு டெல்லி சென்றார்.

எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் திரிணாமுல் காங்கிரஸ் தனித்து போட்டியிடும் என மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி அறிவித்த பிறகு, ராகுல்காந்தியின் நடைபயணம் மீண்டும் அம்மாநிலத்தில் நேற்று தொடங்கியது.

இதனிடையே, ஜல்பைகுரியில் நீதிப்பயணம் தொடர்பான போஸ்டர்கள், பேனர்கள் கிழிக்கப் பட்டதால் பதற்றம் நிலவுகிறது.

இதனால் ராகுல்காந்தியின் நீதிப்பயணத்திற்கு போதிய பாதுகாப்பு வழங்க வேண்டுமெனவும், பயணத்தில் பங்கேற்க வேண்டுமென வும் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, முதலமைச்சர் மம்தா பானர்ஜிக்கு கடிதம் எழுதி உள்ளார்.

## வேடந்தாங்கலுக்கு வெளிநாட்டு பறவைகள் வருகை அதிகரிப்பு!

*சென்னை, ஜன. 29-*

*கண்டம் விட்டு கண்டம் தாண்டி கடல் கடந்து வரும் வெளிநாட்டு பறவைகளுக்கு வாழ்விடம் ஏற்படுத்திக்கொடுக்க, தமிழகத்தில் 13 இடங்களில் பறவைகள் சரணாலயம் இருக்கின்றன.*

*அதில், பழமை வாய்ந்தது, செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் ஆகும். சென்னையில் இருந்து 82 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இந்த சரணாலயம் 73 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ளது.*

*அந்த வகையில், இந்த ஆண்டு வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்துக்கு நத்தை குத்தி நாரை, சாம்பல் நாரை, கூழைக்கடா, வெள்ளை அரிவாள் மூக்கன், மிளிர் உடல் அரிவாள் மூக்கன், பாம்புத்தாரா, வர்ண நாரை, வக்கா, கரண்டிவாயன், தட்டைவாயன், ஊசிவால் வாத்து உள்பட 32 வகையான பறவைகள் வந்துள்ளன.*

*ஏரியில் நீர் முழுக் கொள்ளளவான 14½ அடியில் 14 அடி அளவுக்கு இருப்பதால், தண்ணீர் நிரம்பி காணப்படுகிறது. சுற்றியுள்ள ஏரிகளில் மதுராந்தகம் ஏரியை தவிர மற்றவைகளில் போதுமான அளவு நீர் இருப்பதால், வெளிநாட்டு பறவைகள் குதூகலம் அடைந்துள்ளன.*

*தற்போது, வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்துக்கு 35 ஆயிரம் வெளிநாட்டு பறவைகள் வந்துள்ளன. ஏரியில் நீர் நிரம்பி இருப்பது போல், பறவைகளின் கூட்டமும் நிரம்பி வழிகிறது.*






நாடாளுமன்றத் தேர்தல் குறித்து அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற நீலகிரி மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் தேர்தல் ஒருங்கிணைப்பு குழுவைச் சேர்ந்தவரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். இதில் நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவினர் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரான அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் அமைச்சர் கா.ராமச்சந்திரன், மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் உள்ளிட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



நாடாளுமன்றத் தேர்தல் குறித்து அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற திருப்பூர் மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் தேர்தல் ஒருங்கிணைப்பு குழுவைச் சேர்ந்தவரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். இதில் நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவினர் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரான அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் க.செல்வராஜ், இல.பத்மநாபன் உள்ளிட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

நெல்லை மத்திய மாவட்டத்தில் மாலை ராஜா தலைமையில்

# வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## ஏ.கே.எஸ்.விஜயன், டி.பி.எம்.மைதீன்கான், ஜெகதீசன் சிறப்புரை!

நெல்லை.ஜன.29-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க மாணவர் அணி சார்பில் மொழிப் போர் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் நெல்லை டவுண் வாகையடி முனை குளப்பிறை தெருவில் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலைராஜா தலைமையில்

மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பகுதி செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கல்லூர் பால சுப்பிரமணியன் வரவேற்புரையாற்றினார், துணை அமைப்பாளர்கள் ரம்சான் அலி,ஆறுமுகராஜா ஆகியோர் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினர்.

இந்நிகழ்வில் கழக விவசாய அணி செயலாளர் தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், தலைமை கழக பேச்சாளர் தரமணி ஜெகதீசன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

நிகழ்வில் கழக விவசாய அணி செயலாளர்,தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் பேசியதாவது.

மொழிக்காக உயிரிழந்த 12 பேரின் தியாகத்தை போற்றும் வீரவணக்கம் செலுத்தும் உரிமையும்,கடமையும் தி.மு.க.விற்கு மட்டுமே உண்டு.இதற்கு காரணம் மொழிக்காக பணியாற்றிய இயக்கம் தி.மு.க. தான்.1938 ஆம் ஆண்டு தொடங்கிய போராட்டம் இன்று வரை உள்ளது.இந்தி மொழியை தமிழகத்திற்குள் நுழைய விடமாட்டோம் என முதலமைச்சர் அவர்கள் பணியாற்றி கொண்டு இருக்கிறார்கள். தி.மு.க. அரசு பொறுப்பேற்று பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் தந்து கொண்டு இருக்கிறார்.மகத்தான திட்டமான கலைஞர் தந்த திருமண உதவித் தொகை திட்டத்தின் நீட்சியாக புதுமைப்பெண் திட்டம் மூலம் மற்ற மாநிலங்களை விட தமிழகத்தில் பெண்கள் அதிக அளவில் கல்வி அறிவு பெற்றுள்ளனர்.இந்த திட்டத்தின் மூலம் 2,64,054 பேர் பயன் பெற்று வருகின்றனர்.

இந்தியாவின் முன்னோடி திட்டமாக காலை சிற்றுண்டி திட்டம் மூலம் 17,000 பள்ளிகளைச் சேர்ந்த 33 லட்சம் மாணவ, மாணவிகள் பயன் பெறுகின்றனர். இதுபோன்று ஏழை, எளிய,மக்கள் பயன்பெறும் ஏராளமான திட்டங்களை தி.மு.க. அரசு செயல்படுத்தி வருகிறது.

பிரதமர் மோடி தமிழகம் வந்தபோது கூட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்க்கவில்லை.அவருக்கு தமிழக மக்கள் மீது அக்கறையில்லை, அவர்களுக்கு நன்றாக தெரியும் இது திராவிடம் மண்.இங்கு நம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்பது.ஒன்றிய அரசின் வரிபகிர்வு மிக மோசமான கொள்ளை இட்லி,சாம்பார்க்கு வரி விதித்தார்கள்.ஆனால் தமிழகத்தில் நடக்கும் எய்ம்ஸ் மருத்துவமனை, மெட்ரோ ரயில் திட்டம் உள்ளிட்ட திட்டங்களுக்கு மற்ற மாநிலங்களைப் போல் நிதி ஒதுக்கவில்லை, மிக குறைந்த அளவில் நிதி தந்துள்ளார்கள். 5 எய்ம்ஸ் மருத்துவமனையில் மற்ற மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு சொந்த நிதியை கொடுத்துவிட்டு,மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு ஜப்பான் நாட்டில் உள்ள ஒரு நிறுவனத்திடம் கடன் கேட்டு உள்ளதாக கூறுகிறார்கள். மோடி தலைமையிலான அரசு தமிழகத்தை வஞ்சிக்கிறது.

இவ்வாறு கழக விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் பேசினார்.

இந்நிகழ்வில் தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீதாராமன்,மாவட்ட துணை செயலாளர்கள் தர்மன்,சுரேஷ், கிரிஜா குமார்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல்.எஸ்.லெட்சுமணன் பேச்சி பாண்டியன்,மாநகராட்சி மேயர் சரவணன்,துணை மேயர் ராஜ், பொதுக்குழு உறுப்பினர் நடராஜன், பொருளாளர்கள் வண்ணை சேகர்,

அண்ணாதுரை, பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன் (தச்சை) அன்டன் செல்லத்துரை (பாளை)துபாய் சாகுல் (மேலப்பாளையம்) ஒன்றிய செயலாளர் அருள்மணி,அணி அமைப்பாளர்கள் காமினிதேவன்,பொன்னையா பாண்டியன், சேக்தாவுது,சேவியர், செந்தில்,அனிதா,சின்னத்துரை,

மீரான்மைதீன், முன்னாள் பொருளாளர் அருண் குமார்,முன்னாள் துணை செயலாளர் ஆ.கா.மணி,மகளிர் அணி ரேவதி அசோக்,பேச்சியம்மாள்,சபி அபீர் பாத்து,வள்ளியம்மாள்,பேரூர் செயலாளர் செல்வபாபு, உள்பட கழக நிர்வாகிகள்,மாமன்ற உறுப்பினர்கள் கழக மூத்த முன்னோடிகள். பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் வினோத்,முத்துகிருஷ்ண ராஜா, அஸ்வின்பேபி ஆகியோர் நன்றியுரை யாற்றினர்.


**கோயம்புத்தூர் மாநகராட்சி**

பொறியியல் பிரிவு

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.(e)6/2024 நாள் : 27.01.2024

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | மேற்கு, வடக்கு, தெற்கு மற்றும் மத்திய மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் தார்ஒட்டு போடுதல் | 86 பணி | 13.02.2024 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 14.02.2024 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் - 1. தொலைபேசி எண். 0422 2396026. Email : commr.coimbatore@tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 047/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 27.01.2024


பேரறிஞர் அண்ணா 55வது நினைவு நாள் :

# கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் தலைமையில் பிப்.3 அன்று அமைதிப் பேரணி!

## மாவட்டக் கழகத் தோழர்களுக்கு சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள்!



காஞ்சி தந்த காவியத் தலைவர் - உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் - தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை -, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் - "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் - "மெட்ராஸ் ஸ்டேட்" என்ற பெயரை "தமிழ்நாடு" என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் - சுயமரியாதை சுடரொளி - சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் - எழுத்து வேந்தர் - தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் - பேரறிஞர் அண்ணா அவர்களின் **55வது** நினைவு நாளினையொட்டி, **கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு மற்றும் கழக முன்னணியினர் பிப்ரவரி - 3, சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு காமராஜர் சாலையில் அமைந்துள்ள அண்ணா நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவார்கள்.**

இந்த அமைதிப் பேரணி வாலாஜா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகிலிருந்து புறப்பட்டு அண்ணா சதுக்கத்தை சென்றடையும்.

கழக இந்நாள் - முன்னாள் அமைச்சர்கள், இந்நாள் - முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நல உரிமைப் பிரிவு, மீனவர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணியினரும் அண்ணன் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை கிழக்கு, சென்னை தெற்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

நாள்- 28-1-2024

**சென்னை மாவட்ட தி.மு.க.**

# நாடாளுமன்றத் தேர்தல் 2024

# தலைமைக் கழக அறிவிப்பு

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், 22-01-2024 அன்று மாலை 5 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனவரி21 அன்று சேலத்தில் நடைபெற்ற தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் எழுச்சியுரையாற்றும்போது தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகளான பொறுப்பு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ மாநகர / பகுதி/ ஒன்றிய/ நகர/ பேரூர் கழகச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் மண்டலக்குழுத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள், நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றியக்குழுத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் உள்ளிட்ட "நிர்வாகிகள் சந்திப்பு" கீழ்க்கண்ட அட்டவணைப்படி. சென்னை, அண்ணா சாலை, "அண்ணா அறிவாலயத்தில்" நடைபெறும்.

| தேதி | நேரம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 29.01.2024 | காலை 9.00 மணி | சிவகங்கை, விருதுநகர் |
| | மாலை 3.00 மணி | தென்காசி, திருநெல்வேலி |
| 30.01.2024 | காலை 9.00 மணி | தூத்துக்குடி, கன்னியாகுமரி |
| | மாலை 3.00 மணி | மதுரை, தேனி |
| 31.01.2024 | காலை 9.00 மணி | இராமநாதபுரம், கடலூர் |
| 01.02.2024 | காலை 9.00 மணி | சிதம்பரம், மயிலாடுதுறை |
| | மாலை 3.00 மணி | நாகப்பட்டினம், தஞ்சாவூர் |
| 02.02.2024 | காலை 9.00 மணி | வேலூர், அரக்கோணம் |
| | மாலை 3.00 மணி | விழுப்புரம், கள்ளக்குறிச்சி |
| 03.02.2024 | காலை 10.00 மணி | வடசென்னை, தென் சென்னை |
| | மாலை 3.00 மணி | மத்திய சென்னை, திருபெரும்புதூர் |
| 04.02.2024 | காலை 9.00 மணி | திருவண்ணாமலை, ஆரணி |
| | மாலை 3.00 மணி | பெரம்பலூர், திருச்சி |
| 05.02.2024 | காலை 9.00 மணி | கரூர், திண்டுக்கல் |
| | மாலை 3.00 மணி | காஞ்சிபுரம், புதுச்சேரி |

குறிப்பு: அந்தந்த நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பாகவே அரங்கத்திற்குள் வந்து அமர்ந்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

தூத்துக்குடி மாவட்டத்தில்

# 120 ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு - நிதியுதவி!

## அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார்

தூத்துக்குடி, ஜன.29-

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதா ஜீவன் மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி தலைமையில் இரண்டாவது கட்டமாக 120 ஏழைப் பெண்களுக்கு திருமணத்திற்கு திருமாங்கல்ய தங்க நாணயமும் திருமண நிதியுதவிகளையும் நேற்று (28.01.2024) வழங்கினார்.

முன்னதாக கோவில் பட்டி இராமசுவாமிதாஸ் பூங்கா அருகில் இன்று சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடைபெற்ற பெண்களுக்கு எதிரான வன்கொடுமை ஒழிப்பு விழிப்புணர்வு மினி மாரத்தான் போட்டியியில் முதல் 10 இடம் மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் கேடயங்களையும் தேசிய அளவில் நடைபெற்ற மிதி வண்டி சாம்பியன் போட்டியில் முதலிடம் பெற்றமைக்காகவும் தற்போது நடைபெற்று வரும் 'கேலோ இந்தியா' விளையாட்டு போட்டியில் 2 தங்கப்பதக்கமும் 1 வெள்ளி பதக்கமும் பெற்ற செல்வி.ஜெ.ஸ்ரீமதி அவர்களுக்கு சாதனையாளர் விருதினையும் உலக அளவில் மாற்றுத்திறனாளிகளுக்கான மீத்திறள் போட்டியில் வெண்கல பதக்கம் வென்ற செல்வி.காயத்ரி அவர்களுக்கு சாதனையாளர் விருதினையும் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமை ஒழிப்பு விழிப்புணர்வு மினி மாரத்தான் போட்டியை நடத்துவதற்கு உதவி புரிந்த 17 தன்னார்வலர்களுக்கு சான்றிதழ்களையும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதா ஜீவன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கோவில்பட்டி நகர்மன்றத் தலைவர் கருணாநிதி கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி. கஸ்தூரிசுப்புராஜ்கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.ஜேன் கிறிஸ்டி பாய், மாவட்ட சமூக நல அலுவலர் செல்வி.பிரேமலதா கோவில்பட்டி வட்டாட்சியர் லெனின் மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் சந்திரசேகர் மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திருமதி. தங்க மாரியம்மாள் மற்றும் அரசு அலுவலர்கள் பொதுமக்கள் மாணவர் மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.எஸ்.கே. சத்தியேந்திரன்

**சனவரி 29 (1986)**



**இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளராக தொடர்ந்து இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றியவர்.**

**இராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் – பின்னர், இராமநாதபுரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் களம் கண்டு சிறை சென்ற தீரர், நல்ல பண்பாளர், இனியவர், எளியவர், செயல் வீரர்.**

**"சேதுபதிச் சீமையின் செந்தாமரை மலரே! உறுதி குலையாத உடன்பிறப்பு என்ற பெருமைக்குரிய உனது கால்மலர்களில் எனது கண்ணீரைப் பன்னீராய்க் கொட்டி உனக்கு இறுதி வணக்கம் செலுத்துகிறேன். நிழற்படமாகி விட்டாய் எனினும், எங்கள் நெஞ்சில் நிலையான இடம் பெற்றுவிட்டாய்" என தலைவர் கலைஞரால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்த

# ஜனநாயக அமைப்புகளில் மாண்பு - நல்லொழுக்கம் பேண வேண்டியது அவசியம்!

## மும்பையில் நடைபெற்ற பேரவைத் தலைவர்கள் மாநாட்டில் மு.அப்பாவு பேச்சு!



மும்பை, ஜன.29-

**பேரவைத் தலைவர் மு.அப்பாவு நேற்று முன்தினம் (27.1.2024) மும்பையில் நடைபெற்ற பேரவைத் தலைவர்கள் மாநாட்டில், ஜனநாயக அமைப்புகளின் மீது மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்த நாடாளுமன்றம், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் சட்டமன்றங்கள் ஆகியவற்றில் மாண்பு மற்றும் நல்லொழுக்கம் பேண வேண்டியதன் அவசியம் குறித்து உரையாற்றினார்.**

மாநாட்டில் அவர் பேசியதாவது:-

இப்போது இந்தியாவில் இருக்கின்ற ஜனநாயக முறைக்கு முதல் தொடக்கப்புள்ளி சோழர் ஆட்சிக் கால குடவோலை முறையாகும். இதற்குச் சான்றாக, தமிழ்நாட்டில், காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் கல்வெட்டை குறிப்பிட்டுச் சொல்லலாம். பத்து தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டு, கிராம சபை தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவ்வாறு, குடவோலை முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம சபை தலைவர்களை அவர்களின் செயல்பாட்டின் அடிப்படையில் நீக்கும் அதிகாரமும் அதில் குறிப்பிடப்பிட்டிருந்தது. அதனுடைய தொடர்ச்சிதான் இந்திய ஜனநாயகம்.

நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களுக்கு மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை கொண்ட அமைப்புதான் குடியாட்சி முறை இந்திய ஜனநாயகம் ஆகும். கூட்டாட்சி முறை அமைப்பைக் கொண்டதுதான் நம்முடைய ஜனநாயக அமைப்பு. இந்திய ஜனநாயகத்தின் நான்கு தூண்கள் என்பவை, நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்கள், நிர்வாகத் துறை, நீதித் துறை மற்றும் பத்திரிகைத் துறை ஆகியவை ஆகும். இந்த நான்கு தூண்களும் வெவ்வேறு அமைப்புகளாக இருந்தாலும், இணைந்து செயல்பட்டால்தான் மக்களுக்கு நன்மைகள் ஏற்படும். குறிப்பாக, நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் மக்களுடைய பிரச்சினைகள் குறித்து கொண்டு வரப்படுகின்ற தீர்மானங்கள், விவாதிக்கப்பட்டு, சட்டமாக்கி சரியான முறையில் செயல்படுத்தப்படுகின்றனவா என்பதை நீதித் துறை கண்காணிக்கிறது. நிர்வாகத் துறை சரியாக செயல்படுகின்றதா என்பதை பத்திரிக்கைத் துறை கண்காணிக்கிறது.

நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் கொண்டுவரப்படும் மசோத்தாக்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வரும் பிரதிநிதி களால் முழுமையாக விவாதிக்க அனுமதிப்பதுதான் ஜனநாயகத்தின் மாண்பு ஆகும். மேலும், வினாக்கள் விடைகள் நேரம், நேரமில்லா நேரத்தில் உறுப்பினர்களை முழுமையாக பேச அனுமதிக்க வேண்டும்.

நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களின் மாண்பைக் கெடுக்கும் வகையில் சில நேரங்களில் சில மக்கள் பிரதிநிதிகளின் நடவடிக்கைகள் இருக்கும் போது பேரவைத் தலைவர்கள் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பது சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர் ஆனந்த் வெங்கடேஷ் அவர்கள், "*I will refer to IPC only as IPC even after it gets replaced with new law named in Hindi*" என்று குறிப்பிட்டுள்ளார்.

2006-2011 ஆண்டு தமிழ்நாட்டில் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பு வகித்த காலக்கட்டத்தின்போது, சட்டன்றத்தின் நடந்த நிகழ்வு ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அப்போது எதிர்க்கட்சித் துணைத் தலைவராகப் பொறுப்பு வகித்தவர் ஓ.பன்னீர் செல்வம் அவர்கள். அவையில் நடந்த ஒரு நிகழ்வுக்காக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் அவையிலிருந்து பேரவைத் தலைவர் அவர்கள் வெளியேற்றி விடுவார். அவைக்கு வருகை தந்தவுடன் அதனை அறிந்த தலைவர் கலைஞர் அவர்கள், அவர்கள் அனைவரையும் மீண்டும் அவைக்கு அழைத்து வருமாறு தற்போதைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் தெரிவித்து, மீண்டும் அவர்களை அவைக்கு அழைத்து வந்து அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளச் செய்தவர்தான் தலைவர் கலைஞர் அவர்கள். இதுதான் ஜனநாயக மாண்பு.

### எதிர்க்கட்சிகளுக்கு பேச கூடுதல் நேரம் அனுமதி!

தமிழ்நாட்டில் தற்போது, 132 ஆளுங்கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 101 பேரும் உள்ளனர். கடந்த இரண்டரை ஆண்டுகளில், எதிர்க்கட்சி உறுப்பிர்களுக்கு 107 மணி நேரம் பேசுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு 78 மணி நேரம்தான் பேச அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய கருத்துகள் அவையில் அதிகளவில் பதிவு செய்யப்பட வேண்டுமென்பதுதான் முதலமைச்சர் அவர்களின் எண்ணமாகும்.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளால் நிறைவேற்றப்படுகின்ற சட்ட முன்வடிவுகள் அனைத்திற்கும் மேதகு குடியரசு தலைவர் அவர்கள் ஓரிரு நாட்களில் அனுமதி அளித்து விடுகிறார். ஆனால், பல மாநிலங்களில் ஆளுநர்களால் பல சட்ட முன்வடிவுகள் பல மாதங்களாக, பல ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டு, உச்சநீதிமன்றம் வரை பல மாநில அரசுகள் சென்றுள்ளன. இதற்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்ற நோக்கத்தில்தான், நான், சிம்லாவில் நடைபெற்ற பேரவைத் தலைவர் மாநாட்டில், " ஆளுநர்கள், சட்ட முன்வடிவுகளுக்கு ஒப்புதல் வழங்குவதற்கு கால அவகாசம் முறையாக நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தினேன்". அதையே தற்போதும், நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

### சட்டமன்ற மாண்பை இழிவுப்படுத்திய ஆளுநர்

அதோடு, கடந்த ஆண்டு தொடக்கத்தில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் உரையை ஆற்ற வந்த ஆளுநர் அவர்கள், ஆளுநர் உரையில் பல பகுதிகளைச் சேர்த்தும், நீக்கியும் வாசித்து தமிழக சட்டமன்ற மாண்பை இழிவுப்படுத்தியை நினைவுகூர விரும்புகிறேன்.

தற்போது, கேரள மாநிலத்தினுடைய ஆளுநர் அவர்கள், ஆளுநர் உரையின் கடைசிப் பக்கத்தை மட்டும் அவையில் வாசித்து, ஜனநாயகத்தை கேலிக் கூத்தாக்கியதை ஏற்றுக்கொள்ளவே முடிய வில்லை.

ஜனநாயக மாண்பை, ஜனநாயக முறையில், நாட்டு மக்களும், ஆளும் கட்சிகளும் பின்பற்றினால் தான் நம்முடைய நாட்டிற்கு பெருமை சேர்க்க முடியும்.

இவ்வாறு அவர் பேசினார்.






நாடாளுமன்றத் தேர்தல் குறித்து அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற கோவை மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் தேர்தல் ஒருங்கிணைப்பு குழுவைச் சேர்ந்தவரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். உடன் நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவினர்கள் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரான அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் தங்கம் தென்னரசு, மாவட்டக் கழக செயலாளர்கள் கோவை கார்த்திக், தொண்டாமுத்தூர் அ.ரவி, தளபதி முருகேசன், மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.






நாடாளுமன்றத் தேர்தல் குறித்து சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற சேலம் மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். உடன் நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவினர்கள் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரான அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் தங்கம் தென்னரசு, மாவட்டக் கழக செயலாளர்கள் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.சிவலிங்கம், டி.எம்.செல்வகணபதி மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



## இளைஞர் அணி மாநாட்டுத் தீர்மானங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க

# அனைத்து ஊர்களிலும் தெருமுனைக் கூட்டங்களை எழுச்சியுடன் நடத்திடுவீர்!

### மாவட்ட - மாநகர இளைஞர் அணி அமைப்பாளர்கள் கூட்டத்தில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!



**சென்னை, ஜன. 29 –**

**சென்னை – பசுமை வழிச் சாலையில் உள்ள தமது இல்லமான ‘குறிஞ்சியில்’ நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற, மாவட்ட – மாநகர இளைஞர் அணி அமைப்பாளர்கள் கூட்டத்தில் உரையாற்றிய கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ‘‘இளைஞர் அணி மாநில மாநாட்டுத் தீர்மானங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க, ஊர்கள் தோறும் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்களை எழுச்சியுடன் நடத்திடுவீர்!’’ என வேண்டுகோள் விடுத்தார்.**

திமுக இளைஞர் அணியின் மாவட்ட மாநகர மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 26.1.2024 வெள்ளிக்கிழமையன்று சென்னை பசுமைவழிச்சாலையில் நடைபெற்றது.

இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நாடு முழுவதும் எடுத்துச் செல்வது, ஒன்றிய -நகர-பகுதி பேரூர் நிர்வாகிகளைத் தேர்வு செய்வது... உள்பட இளைஞர் அணியில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆக்கப் பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமை வகித்து ஆற்றிய உரை வருமாறு:-

எனக்கு முன்பு சிறப்புரை யாற்றிய, சிற்றுரை ஆற்றிய அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நாகர்கோவில் மாநகர அமைப்பாளர் சி.டி.சுரேசுக்கு அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம்.

கோவை தெற்கு மாவட்டத் துணை அமைப்பாளர் சகோதரர் தென்றல் மணிமாறன், இங்கு பேசும்பொழுது உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார்.

இரண்டு நாட்களுக்கு முன்பு அவர்களின் இல்லத்தில் ஒரு சின்ன பிரச்சினை. பா.ஜ.க காரர்கள் வேண்டும் என்றே அவரிடம் வம்பு இழுத்து, அவரை உசுப்பேற்றி இருக்கிறார்கள். பொய்ப் பிரச்சாரம் செய்து நம்மைச் சீண்டுவது தான் எப்போதுமே அவர்களுக்கு வேலை. அந்தப் பிரச்சினையை சுமூகமாகத் தீர்த்து வைத்தோம்.

**அத்தனை பேரும் துணை நிற்பவர்கள்தான்!**

மணிமாறன் இங்கே பேசும்போது, விரைவில் நான் துணை முதலமைச்சராக வேண்டும் என்று சொன்னார். அதற்கு ஏற்கனவே பதில் சொல்லி இருக்கிறேன். அத்தனை அமைச்சர்களுமே முதல்வருக்குத் துணையாகத்தான் இருக்கப் போகிறோம். இன்னும் சொல்லப்போனால் இளைஞர் அணித் தம்பிமார்கள் நீங்கள் அத்தனை பேரும் நம்முடைய முதலமைச்சருக்குத் துணை நிற்பவர்கள்தான்.

நம்முடைய தென்றல் மணிமாறனுக்கு எப்படித் துணையாக நின்றோமோ அதேபோல் எப்பொழுதுமே கழகத்தின் தொண்டனுக்கு, குறிப்பாக இளைஞர் அணித் தம்பிமார்களுக்குத் தலைவர் அவர்களும் நானும் துணை நிற்போம்.

அடுத்து, திருவாரூர் மாவட்ட அமைப்பாளர் பனங்குடி குமார் இந்த மாநாட்டை நடத்தி முடித்ததற்காக எனக்குப் பாராட்டு விழா நடத்த வேண்டும் என்றார். நமக்குப் பணிகள் நிறைய இருக்கின்றன. தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்களை நடத்த வேண்டும்.

அந்தமான் மாநில அமைப்பாளர் ராஜா மிகுந்த உணர்வோடு பேசினார். மாநாட்டுக்காக இரண்டு முறை விமான டிக்கெட் புக் பண்ணினேன். இரண்டு முறையும் கேன்சல் ஆகிவிட்டது என்றார். விமான டிக்கெட்டுக்கு காசு கேட்பாரோ என்று நான் கூட பயந்தேன்.

அதேபோல் நீலகிரி மாவட்ட அமைப்பாளர் இமயம் சசிகுமார், மாநாட்டு நினைவு இன்னும் மனதில் இருந்து போகவில்லை. திடலிலேயே இருக்கலாம் போல் இருக்கிறது என்றார். தயவு செய்து சீக்கிரம் வீட்டுக்குப் போங்க. மாநாட்டுத் திடலிலேயே உட்கார்ந்து இருக்காதீர்கள். வீட்டில், மாநாடு இன்னும் நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்லிவிட்டு, வந்திருப்பார் என்று நினைக்கிறேன்.

**எனது மனதுக்கு நெருக்கமான இளைஞர் அணிப் பொறுப்பு!**

மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் சகோதரர் பிரகாஷ்க்கு என் மேல் என்ன கோபம் என்று தெரியவில்லை. இளைஞர் அணியிலிருந்து என்னை ‘ப்ரமோட்’ பண்ணி தாய்க் கழகத்திற்கு அனுப்ப வேண்டும் என்று சொல்கிறார். அப்துல் மாலிக்கும் இதே கருத்தில் பேசினார்.

ஒரு மாநாடுதான் நடத்தினேன். அதற்குள் என்னை இளைஞர் அணியிலிருந்து அனுப்ப நினைக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர் என என்னென்ன பொறுப்புகள் வந்தாலும், என் மனதுக்கு மிகவும் நெகிழ்ச்சியான நெருக்கமான ஒரு பொறுப்பு என்றால் அது இந்த இளைஞர் அணிச் செயலாளர் பொறுப்புதான்.

மாநாட்டு மேடையில் தலைவர் அவர்களை வைத்துக்கொண்டே சொன்னேன், “இளைஞர் அணிக்கு பிராண்ட் அம்பாஸிடர் நீங்கள்தான். நீங்கள் இப்போது கழகத் தலைவராக இருக்கலாம். எங்களுடைய இளைஞர் அணிக்கு எப்பொழுதுமே நீங்கள்தான் செயலாளர்” என்று பெருமையோடு சொன்னேன்.

அதேபோல் இணைப்புரை ஆற்றிய சகோதரர் ஜி.பி.ராஜாவுக்கு தொகுத்து வழங்கத்தான் வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால், கிடைக்கின்ற வாய்ப்புகளில் எல்லாம் அவர் பேருரை ஆற்றிவிட்டார். இப்படி பேசிய அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகள்.

**இந்திய ஒன்றியமே உற்றுநோக்கிய மாநாடு!**

ஒட்டுமொத்த இந்திய ஒன்றியமே உற்று நோக்கிய இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு மிகப்பெரிய ஒரு தெம்பை நமக்கு கொடுத்திருக்கிறது. இந்தியாவில் இனிமேல் ஒரு அரசியல் இயக்கம், இப்படி ஒரு மாநாடு நடத்த முடியாது என்கின்ற அளவிற்கு நாம் நடத்தி முடித்துள்ளோம். ஆறு லட்சம் பேர் கலந்துகொண்ட இந்த மாநாட்டிற்காக உழைத்த உங்கள் ஒவ்வொருவரையும் பாராட்ட வேண்டும் என்பதற்காகத்தான் நாம் இன்று இந்த ஆலோசனைக் கூட்டத்தை கூட்டி இருக்கிறோம். எனவே இங்கு வந்திருக்கக்கூடிய இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தேர்தலுக்கு இரண்டு மாதங்கள் முன்னாடி நடக்கப் போகின்ற மாநாடு. தாய்க் கழகமே நடத்தியிருக்கலாம். ஆனால், இளைஞர் அணி தம்பிமார்கள் நாம் நடத்திக் காட்டுவோம் என்ற அந்த நம்பிக்கையை தலைவர் நம் மீது வைத்திருக்கிறார். அதற்கு தலைவர் அவர்களுக்கு நன்றி.

**நேரு அண்ணன் அவர்களுக்கு நன்றி!**

இந்த மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் கழக முதன்மைச் செயலாளர் அண்ணன் நேரு அவர்களுடைய உழைப்பு கொஞ்சம் நஞ்சம் கிடையாது. சேலத்திலேயேதான் இருந்தார். இரண்டு முறை தள்ளி போனது. “பரவாயில்லை, தம்பி பார்த்துக் கொள்ளலாம். தலைவர் என்ன சொல்கிறாரோ அதை செய்து காட்டுகிறேன்” என்றார். இந்த மாநாட்டை, வெற்றி மாநாடாக மாற்றிக் காட்டியதற்கு மிக முக்கிய காரணம் அண்ணன் நேரு அவர்கள்தான்.

அதேபோல சேலம் மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் ராஜேந்திரன், அண்ணன் எஸ். ஆர்.சிவலிங்கம், அண்ணன் செல்வகணபதி ஆகியோருக்கும் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம். கழகப் பொதுச் செயலாளர், கழகப் பொருளாளர் உள்ளிட்ட அனைத்து தலைமை கழக நிர்வாகிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாநாட்டைத் திறந்து வைத்த மாணவர் அணிச் செயலாளர் எழிலரசன் அவர்களுக்கும் கழகத்தின் இரு வண்ண கருப்பு சிவப்புக் கொடியை ஏற்றி வைத்த கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் அத்தை கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும் இந்த இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் நன்றி சொல்கின்றது.

**நீங்கள் கொடுத்த உழைப்புதான் வெற்றிக்குக் காரணம்!**

மாநாட்டின் வெற்றிக்காக உழைத்த இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள் உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றி. முக்கியமாக, இங்கு வந்திருக்கக்கூடிய இளைஞர் அணியின் இரத்த நாளங்களான நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றி. மாநாட்டின் வெற்றி என்பது என் தனிப்பட்ட உழைப்புக்குக் கிடைத்த வெற்றி கிடையாது. என்னை விட களத்தில் நீங்கள் கொடுத்த உழைப்புதான் இந்த மாநாட்டின் வெற்றிக்குக் காரணம்.

**வருவாய் மாவட்டங்களில் செயல்வீரர்கள் கூட்டம்!**

மாநாட்டுக்கு இளைஞர்களை எல்லாம் கூட்டிக் கொண்டு வர வேண்டும். அதை எப்படி ஒருங்கிணைப்பது என்று யோசித்தபோதுதான் தமிழ்நாடு முழுவதும் வருவாய் மாவட்டங்களில் செயல்வீரர்கள் கூட்டத்தை நடத்துவோம் என்று ஆரம்பித்தோம். செயல்வீரர் கூட்டம் மூலமாக தமிழ்நாடு முழுவதும் உள்ள ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்களுக்கும் நம்முடைய இளைஞர் அணி மற்றும் தம்பிமார்களுக்கும் மிகப் பெரிய ஒரு ஒருங்கிணைப்பு ஏற்பட்டது. அந்த ஒருங்கிணைப்பை மாநாட்டுத் திடலிலும் என்னால் பார்க்க முடிந்தது. அந்த ஒருங்கிணைப்பு என்றைக்கும் தொடர வேண்டும் என்று விரும்புகின்றேன்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் முதல் கூட்டம் ஆகஸ்ட் 20 ஆம் தேதி நடத்தினோம். அந்தக் கூட்டத்திற்கான மேடையை மாவட்டக் கழகச் செயலாளர் அவர்களும் அப்துல் மாலிக் கும் உதயசூரியன் மாதிரி அமைத்தார்கள். அதேமாதிரி திருப்பூர் மாவட்ட செயல் வீரர் கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் `கோபாலபுரம் இல்லம்’ போன்று அமைத்து பெருமைப் படுத்தினார்கள்.

நாமக்கல் மாவட்டம் சொல்லவே வேண்டாம். இப்போதுதான் இளைஞர் அணியிருந்து மாவட்டக் கழகச் செயலாளர்களாக ஆகியிருக்கிறார்கள். செயல்வீரர் கூட்டத்திற்கான அரங்கத்தை நம்முடைய இளைஞர் அணி தலைமையகம் `அன்பகம்’ வடிவத்தில் அமைத்துச் சிறப்பித்தார்கள். முன்னாள் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் பேரில் கொடி மேடை, அவர்களின் குடும்பத்திற்கு நிதி உதவி என்று புதிது புதிதாகச் செய்தார்கள். இப்படி ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு விஷயம் ஸ்பெஷலாக நடந்தது.

**மாநாட்டிற்கு வாரி வழங்கிய நிதி!**

மாநாட்டுக்கு மிக முக்கியமான விஷயம் நிதி. நம்முடைய மாநிலத் துணைச் செயலாளர்கள் சேர்ந்து இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டத்திலேயே ரூபாய் 51 லட்சம் நிதி அளித்தார்கள்.

அதைத்தொடர்ந்து, ஒவ்வொரு செயல்வீரர் கூட்டத்திலும் மாநாட்டு நிதியை மாவட்ட கழகச் செயலாளர்களும் இளைஞர் அணி அமைப்பாளர்களும் வாரி வாரி வழங்கினார்கள். சகோதரர் ஜோயல் அவர்கள் ஒருங்கிணைக்கும் மண்டலத்தில் இருக்கக்கூடிய அத்தனை மாவட்ட அமைப்பாளர்களையும் அழைத்து தலா ரூபாய் 10 லட்சம் நிதி கொடுக்கச் செய்தார். இதுபோல ஒவ்வொருவரும் இந்த மாநாடு வெற்றிபெற வேண்டும் என்று கடுமையாக உழைத்திருக்கிறோம்.

> **‘‘வருகின்ற நாடாளுமன்றத் தேர்தல் மிக மிக முக்கியமான ஒரு தேர்தல். ‘இந்தியா’ கூட்டணி மிகப்பெரிய வெற்றியை பெற வேண்டும். அப்போதுதான் மாநில உரிமைகள் மீட்பு என்கின்ற நம்முடைய மாநாட்டின் லட்சியத்தை அடைய முடியும். ‘வர இருப்பது நாடாளுமன்றத் தேர்தல்தானே’ என அலட்சியமாக இருந்து விடக்கூடாது. இந்த தேர்தலின் வெற்றி 2026 சட்டமன்றத் தேர்தலின் வெற்றிக்கு வகை செய்யும் வகையில் இருக்கவேண்டும்.’’**

மாநாட்டிற்கு மொத்தம் எவ்வளவு நிதி வந்திருக்கிறது, எவ்வளவு செலவு ஆகியிருக்கிறது என்று இன்னும் பார்க்கவில்லை. துணைச் செயலாளர் பிரகாஷ்தான் அதற்குப் பொறுப்பு. அவர் சொன்னவுடன் அதை உங்கள் அத்தனை பேருக்கும் சொல்வது என்னுடைய கடமை.

**6 லட்சம் பேர் கலந்து கொண்ட மாநாடு!**

ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் எத்தனை இளைஞர்கள் மாநாட்டுக்கு வருவார்கள் என்று செயல்வீரர் கூட்டத்தின்போது பட்டியல் கேட்டோம். அப்படி வந்த லிஸ்ட்டை பார்த்தால், கிட்டத்தட்ட ஐந்தரை லட்சம் பேர் இருந்தார்கள். எனக்கு அப்போது நம்பிக்கை இல்லை. 5 லட்சம் பேர் எல்லாம் வரமாட்டார்கள், அதிகபட்சம் 2 லட்சம் பேர்தான் வருவார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் என்ன சொன்னீர்களோ அதைவிட அதிகமாகக் கிட்டத்தட்ட 6 லட்சம் பேர் மாநாட்டில் கலந்து கொண்டிருக்கிறார்கள். மாவட்டச் செயலாளர்களும் நீங்களும் சொன்னபடியே அவ்வளவு பேரையும் அழைத்து வந்தீர்கள்.

இளைஞர் அணி சார்பாக அடித்த அத்தனை டீசர்ட்டையும் சரியாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கொண்டு சேர்த்த சகோதரர் ஜோயல் அவர்களுக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் மாநாட்டுத் திடலில் ஒருத்தர் கூட நாம் கொடுத்த டீசர்டை போடாமல் வரவில்லை.

அந்த அளவுக்கு மாநாட்டின் வெற்றிக்காக நாம் அனைவரும் பணிகளை மேற்கொண்டோம். அன்பகத்திலிருந்து நாங்கள் தனியாக ஒரு மாநாட்டுப் பாடல் பண்ணினோம் என்றால் எங்களுக்குப் போட்டியாக ஜோயல் ஒரு பாட்டு போடுகிறார். அவருக்குப் போட்டியாக எபினேசர் இரண்டு பாட்டோடு வருகிறார்.

**கொள்கை விளக்கப் பாடல்கள்!**

இது ஒரு நல்ல விஷயம். நாம் அத்தனைப்பேரும் கொள்கை விளக்கப் பாடல்களை உருவாக்க வேண்டும். வெறும் சினிமா பாடல்களை நம்பி நம்முடைய இயக்கம் இருக்கக் கூடாது. இந்த மூன்று பாடல்கள் இருக்கிறது. அனைத்து இளைஞரணி நிகழ்ச்சிகளிலும் நிகழ்ச்சியை ஆரம்பிப்பதற்கு முன்போ, முடிந்த பிறகோ இந்தப் பாடல்களை ஒளிபரப்ப வேண்டும்.

மாநாட்டுக்காக அமைக்கப்பட்ட குழு மிகச் சிறப்பாக உங்களுடைய பணிகளை செய்து இருக்கிறீர்கள். ஒவ்வொரு குழுவும் ராணுவ கட்டுப்பாட்டோடு உங்களுடைய பணிகளை நீங்கள் மேற்கொண்டீர்கள். நான் கூட சேலம் மாநாட்டுத் திடலுக்கு மூன்று முறைதான் வந்தேன். ஆனால் மாநாட்டுக் குழுவில் இருக்கக்கூடிய நீங்கள் அத்தனை பேரும் பலமுறை மாநாட்டுத் திடலில் கூடி மாநாட்டுப் பணிகளை மேற்கொண்டீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துகள்.

**சிறப்பாக அமைந்திருந்த மாநாட்டு மலர்!**

மாநாட்டு மலர் ரொம்ப சிறப்பாக வந்திருக்கிறது. முதலமைச்சர் தொடங்கி சமீபத்தில் இளைஞர் அணியிலிருந்து தாய்க் கழகத்திற்குப் பொறுப்புக்குச் சென்ற அத்தனை பேரின் இளைஞர் அணி பணிகளை அந்த மலரில் பகிர்ந்திருக்கிறார்கள்.

மலர்க் குழுவின் செயலாளர் ஜெயக்குமார் உள்ளிட்ட டீம் அன்பகத்திலேயே தங்கி இருந்து மலர் தயாரிக்கின்ற அந்தப் பணிகளை எல்லாம் ஒருங்கிணைத்தார்கள். இந்த மாநாட்டு மலரைச் சிறப்பாகக் கொண்டு வருவதற்காக மலர் குழு, இந்தியா கூட்டணி ஒருங்கிணைப்புக் குழு மற்றும் அன்பகத்திலிருந்து உழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

எங்கேயாவது ஒரு சின்ன தவறு நடந்துவிடாதா என்று எதிர்க்கட்சியினர் காத்துக் கொண்டிருந்தார்கள். அ.தி.மு.க மதுரையில் மாநாடு நடத்தினார்கள். அந்த மாநாட்டிற்கு பெயரே புளியோதரை மாநாடு. ஆனால் நம்முடைய மாநாட்டில் அது மாதிரி ஒரு சின்ன சம்பவம் கூட நடக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால் சாப்பாடு பற்றவில்லை என்ற ஒரு சின்ன குறைதான். அந்த அளவுக்குக் கூட்டம்.

**‘தி.மு.க. பைக் ரைடர்ஸ்’ டீம் விழிப்புணர்வு!**

இந்த மாநாட்டை தமிழ்நாடு எங்கும் பேச வைத்தார்கள் என்றால் அது நம்முடைய ‘தி.மு.க பைக் ரைடர்ஸ்’ டீம்தான். மாநாட்டின் நோக்கத்தையும் அது தொடர்பான விழிப்புணர்வையும் பட்டி தொட்டி எங்கும் கொண்டு சென்ற அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**‘ட்ரோன் ஷோ’ புதுமையான நிகழ்ச்சி!**

அது மட்டுமல்ல மாநாட்டிற்கு முதல் நாள் நடந்த ட்ரோன் ஷோ. இந்திய அரசியலிலேயே ஒரு புதுமையான நிகழ்ச்சியாக இருந்தது. நான் கூட இதுவரைக்கும் இது போன்ற நிகழ்ச்சியை பார்த்தது கிடையாது. அசந்து போய் விட்டேன். அந்த அளவுக்கு ட்ரோன் ஷோ நமது மாநாட்டிற்கு ஒரு மிகப் பெரிய எழுச்சியை கொடுத்தது. அந்தக் குழுவுக்கு வாழ்த்துகள்.

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

# மாவட்ட - மாநகர இளைஞர் அணி அமைப்பாளர்கள் கூட்டத்தில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

அன்றைக்கே நிறைய மாவட்டக் கழகச் செயலாளர்கள் மூத்த முன்னோடிகளெல்லாம் போன் செய்து, ‘இந்த ஒரு நிகழ்ச்சி போதும். மாநாடு வெற்றி’ என்று சொன்னார்கள். தொழில்நுட்பத்தின் மூலமாகவும் நம்முடைய கருத்துக்களை நம் இயக்கத்தின் வரலாற்றை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு அது மிகச் சிறந்த ஒரு எடுத்துக்காட்டு.

மாநாட்டுச் சுடரை சென்னை அண்ணா சாலை பெரியார் சிலையில் இருந்து தொடங்கி செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி வழியாக சேலம் மாநாட்டுத் திடலுக்கு வந்தடைந்தது. அவர்களுக்கும் எனது வாழ்த்துகள்.

**முத்தமிழறிஞர் கலைஞர் இல்லாததே எனக்கு இருந்த ஒரே ஒரு குறை!**

இந்த மாநாட்டில் எனக்கு இருந்தது ஒரே ஒரு குறை தான். இந்த மாநாட்டை பார்ப்பதற்கு நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களும், இனமான பேராசிரியர் தாத்தா அவர்களும் இல்லையே என்ற அந்த ஒரு குறை தான். அவர்கள் இருந்திருந்தால் இளைஞர் அணி தம்பிமார்கள் உங்கள் அத்தனை பேரையும் ஆரத் தழுவி வாழ்த்தியிருப்பார்கள். இந்த எழுச்சியை பார்த்து மிகுந்த மகிழ்ச்சி அடைந்து இருப்பார்கள். ஆனால் கலைஞர், பேராசிரியர், பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களின் மறு உருவமாக அந்த மாநாட்டு மேடையில் நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் அமர்ந்திருந்தார்கள்.

மாநாடு வெற்றியடைந்துவிட்டது, நம்முடைய பணிகள் முடிந்து விட்டது என்று நினைக்காதீர்கள். இப்போதுதான் நம்முடைய பணிகளை நாம் மாநாட்டில் இருந்து தொடங்கியுள்ளோம் என்று எண்ணுங்கள்.

**நாடாளுமன்றத் தேர்தல் பணி!**

மாநில உரிமை மீட்பு மாநாட்டில் 25 சிறப்பான தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கிறோம். அந்த 25 தீர்மானங்களை முன்னிறுத்தி தமிழ்நாடு முழுக்க மாவட்டம், ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் கிளை வரை தெருமுனை பிரச்சாரக் கூட்டங்களை நடத்தி நம் தீர்மானங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். அதற்கான பணிகளில் நீங்கள் ஈடுபட வேண்டும்.



சென்னை – பசுமை வழிச் சாலையில் உள்ள ‘குறிஞ்சி’ இல்லத்தில், நேற்று முன்தினம் மாலை, தி.மு.க. இளைஞரணி மாநில, மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கூட்டத்திற்கு – கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார். இந்தக் கூட்டத்தில் இளைஞர் அணி மாநில துணை செயலாளர்கள் ஜோயல், இன்பாரகு, இளையராஜா, ப.அப்துல்மாலிக், பிரகாஷ், பிரபு, ராஜா, சீனிவாசன், ஆனந்தகுமார், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை, தனுஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரப்பன், ஜெ.ஜெ.எபினேசர், பிரபாகர்ராஜா, புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினர் சம்பத் உள்ளிட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் இதில் கலந்துகொண்டனர்.

சமீபத்தில் கழகத்தின் பேச்சாளர்களுடன் ஒரு சந்திப்பை நடத்தினேன். முன்பு மாதிரி தெருமுனைப் பிரச்சாரங்களுக்கு எங்களை யாரும் அழைப்பதில்லை என்று வருத்தப்பட்டார்கள். அன்பகத்தில் இருந்து அவர்களின் விவரங்களை ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் பிரித்துக் கொடுக்கிறேன். மிகப்பெரிய செலவு பண்ண தேவையில்லை. எனவே தெருமுனைப் பிரச்சாரங்களை நாம் மேற்கொள்ள வேண்டும்.

தேர்தல் விரைவில் வர இருக்கிறது. இன்னும் நான்கு, ஐந்து நாட்களில் அறிவிப்பு வந்துவிடும். ஏப்ரல் 14 இல் இருந்து 18 வரை உள்ள ஏதாவது ஒரு தேதியில் தேர்தல் இருக்கும் என்று தேர்தல் தேதியே கிட்டத்தட்ட முடிவாகிவிட்டதாக சொல்கிறார்கள். இன்னும் 55 முதல் 60 நாட்கள் தான் நம்முடைய கையில் இருக்கிறது.

தேர்தல் வேலைகளையும் இளைஞர் அணி பணிகளையும் நாம் சமமாக செய்ய வேண்டும். மாநிலத் துணைச் செயலாளர்களோடு கலந்து பேசி விரைவில் ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் இளைஞர் அணி நிர்வாகிகள் நியமனம் செய்யப்படுவார்கள். அதிகபட்சம் பிப்ரவரி மாத இறுதிக்குள் அந்த அறிவிப்புகள் வெளியாகும்.

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு 234 தொகுதிகளிலும் கலைஞர் நூலகத்தை திறப்பது, வருவாய் மாவட்டம்தோறும் மாரத்தான் போட்டிகளை நடத்துவது, பேச்சுப்போட்டிகளை நடத்தி 100 இளம் பேச்சாளர்களை தலைமைக் கழகத்துக்கு தேர்வு செய்து தருவது... என நம்முன் பணிகள் காத்திருக்கின்றன.

**இல்லந்தோறும் இளைஞர் அணி!**

‘இல்லந்தோறும் இளைஞர்’ அணி என்ற முன்னெடுப்பின் மூலம் உறுப்பினர் சேர்க்கும் உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய பாராட்டுக்கள். குறிப்பாக பி.எல்.ஏ2 பொறுப்பாளர்களோடு சேர்ந்து அந்தப் பணிகளை நீங்கள் செய்தது உண்மையிலேயே நல்ல ரிசல்டை நமக்கு கொடுத்திருக்கிறது.

ஆனால், சில இடங்களில் இல்லம்தோறும் இளைஞர் அணி பணிகள் இன்னும் நிறைவடையாமல் இருக்கிறது. அந்தப் பணிகளையும் சீக்கிரம் முடியுங்கள். அதற்கான படிவங்களை அன்பகத்திற்கு அனுப்பி வையுங்கள்.

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தல் மிக மிக முக்கியமான ஒரு தேர்தல். ‘இந்தியா’ கூட்டணி மிகப் பெரிய வெற்றியை பெற வேண்டும். அப்போதுதான் மாநில உரிமைகள் மீட்பு என்கின்ற நம்முடைய மாநாட்டின் லட்சியத்தை அடைய முடியும்.

‘வர இருப்பது நாடாளுமன்றத் தேர்தல்தானே’ என அலட்சியமாக இருந்து விடக்கூடாது. இந்த தேர்தலின் வெற்றி 2026 சட்டமன்றத் தேர்தலின் வெற்றிக்கு வகை செய்யும் வகையில் இருக்கவேண்டும்.

**சமூக வலைத்தளத்தில் பிரச்சாரம்!**

களத்தில் நாம் ஸ்ட்ராங் என்பது தெரியும். சமூக வலைத்தளத்தில் நாம் அந்த அளவிற்கு பலமாக இல்லை. அதை நாம் உணர்ந்து தான் ஆக வேண்டும். இன்றைக்கு உங்களுக்கு நினைவுப் பரிசாக டேப் (டேப்லேட்) கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒரு செயலி இன்ஸ்டால் செய்து வைத்திருக்கிறோம்.

அதில் எப்படி இயங்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லிக் கொடுப்பார்கள். சமூக வலைத்தளத்தில் செயல்படுவது குறித்து சமீபத்தில் தகவல் தொழில்நுட்ப அணியின் பயிற்சி பாசறைக் கூட்டம் நடந்தது.

தகவல் தொழில்நுட்ப அணியின் செயலாளர் என்னை தொலைபேசியில் அழைத்து, ‘இளைஞர் அணியிலிருந்து பெரிதாக யாரும் கலந்து கொள்ளவில்லை’ என்று சொன்னார். அதில் எனக்கு சின்ன வருத்தம் இருக்கிறது. அதற்காகத் தான் உங்களுக்கு இன்றைக்கு டேப் (TAB) கொடுத்திருக்கிறேன். இனிமேல் நீங்கள் அத்தனை பேரும் சமூக வலைத்தளங்களில் சிறப்பாகச் செயல்பட வேண்டும். ஏனென்றால் இப்போது களத்தில் அரசியல் செய்வது எவ்வளவு முக்கியமோ அதே அளவு சமூக வலைத்தளத்திலும் இயங்குவது முக்கியமாகிறது.

**தி.மு.கவுக்கு மட்டும்தான் வரலாறு உண்டு!**

மக்களிடம் உண்மை சென்று அடைவதை விட பொய், வதந்தி சீக்கிரம் போய் சேர்ந்து விடுகிறது. ஆனால் நம்முடைய இயக்கத்திற்கு மட்டும்தான் வரலாறு இருக்கிறது. தலைவருடைய வரலாறு இருக்கிறது. இயக்கத்தின் வரலாறு இருக்கிறது. கொள்கையும் இருக்கிறது. ‘உங்கள் கொள்கை என்னவென்று’ அ.தி.மு.க. காரரிடம் சென்று கேட்டுப் பாருங்கள். அவர்களுக்கு இருப்பது ஒரே கொள்கைதான். அது, தி.மு.கவை எதிர்ப்பது மட்டுமே.

அ.தி.மு.க நிறுவனர், கலைஞரின் நெருங்கிய நண்பர் எம்.ஜி.ஆர் அவர்களின் பிறந்த நாள் விழா மூன்று நாட்களுக்கு முன்பு நடந்தது. திருப்பத்தூரில் அந்த நிகழ்ச்சிக்காக ஒரு போஸ்டர் அடிக்கிறார்கள். அந்த போஸ்டரில் அந்தக் கட்சியின் மாநில நிர்வாகி, எம்.ஜி.ஆர். அவர்களின் புகைப்படத் திற்கு பதிலாக நடிகர் அரவிந்த்சாமியின் புகைப்படத்தை போட்டு அடித்து விட்டார்கள். இந்த மாதிரியான ஒரு இயக்கத்தை எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா? எம்.ஜி.ஆர் யார்? நடிகர் அரவிந்த்சாமி யார் என்றே அவர்களுக்குத் தெரியவில்லை.

என்னோடு பயணிக்கின்ற மணிகண்டன், என்னுடைய பேச்சுக்களை அவர்தான் தயார் செய்து கொடுப்பார். அதுவும் இந்த செயல் வீரர் கூட்டம் மாவட்டம், மாவட்டமாகச் சுற்றிக் கொண்டே இருந்தோம். அப்போது அவர்தான் என்னுடன் இருந்து என்னென்ன பேச வேண்டும், இந்த மாவட்டத்தில் என்ன பிரச்சனை, எப்படிப் பேச வேண்டும் என்று அவர்தான் குறிப்பெடுத்துத் தருவார். இந்த நேரத்தில் அவருக்கு என்னுடைய நன்றி.

அதேபோல் நம் இளைஞர் அணியின் ஒருங்கிணைப்பாளர் அன்பகம் செந்தில் அவர்களுக்கு நன்றி. இந்த மாநாட்டின் வெற்றிக்குப் பாதி காரணம் செந்தில் அவர்களின் ஒருங்கிணைப்புதான். இருவரும் கிட்டத்தட்ட கணவன் மனைவி மாதிரி. காலையில் சண்டை போட்டுக் கொள்வோம். மாலையில் காரில் ஒன்றாகத்தான் போவோம். ஆனால் பேசிக்கொள்ள மாட்டோம். நான் கோவமாக இருக்கிறேன் என்று அவருக்குத் தெரியும். அவர் கோபமாக இருக்கிறார் என்று எனக்கும் தெரியும். ஆனால் எதுவுமே நடக்காதது மாதிரி இரவு போனில் பேசிக் கொண்டிருப்போம். அவருக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றி.

இந்தக் கூட்டத்திற்கு வந்துள்ள அனைவருக்கும் உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எல்லோரும் நன்றாகச் சாப்பிட்டுவிட்டு செல்லவும். மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்திருக்கிறீர்கள். அந்தமானிலிருந்தும் வந்திருக்கிறீர்கள். எனவே எல்லோரும் பாதுகாப்பாகச் செல்லுங்கள். நீங்கள் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்த அந்தச் செய்தி கேட்டால்தான் எனக்கு உண்மையான தூக்கம் வரும்.

**85 இலட்சம் கையெழுத்துகள்!**

‘நீட்’ தேர்வு அதை மக்கள் போராட்டமாக மாற்ற வேண்டும் என்று அந்தப் போராட்டத்தை நடத்தினோம். அந்தப் போராட்டம் மிகப் பெரிய வெற்றி. 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து என்று நம்முடைய பயணத்தை ஆரம்பித்தோம். கிட்டத்தட்ட நீங்கள் அத்தனைபேரும் சேர்ந்து மாவட்டச் செயலாளர்கள், அனைத்து கழக அணிகள் 85 இலட்சம் கையெழுத்துகளை பெற்றிருக்கிறோம். அதை மாநாட்டு மேடையில் தலைவரிடம் ஒப்படைத்தோம். விரைவில் டெல்லிக்குச் சென்று குடியரசுத் தலைவரைச் சந்தித்து அவரிடம் அதை ஒப்படைக்க இருக்கின்றேன்.”

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில் இளைஞர் அணி மாநில மாநில துணை செயலாளர்கள் ஜோயல், இன்பா ரகு, இளையராஜா, ப.அப்துல்மாலிக், பிரகாஷ், பிரபு, ராஜா, சீனிவாசன், ஆனந்தகுமார், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை, தனுஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரப்பன், ஜெ.ஜெ.எபினேசர், பிரபாகர்ராஜா, புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினர் சம்பத் உள்ளிட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மும்பை த.மு. ஆரியசங்காரன்

**சனவரி 29 (2016)**



சிறுவயது முதல் தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட இரத்தினவேல் என்கின்ற இவர், 1942ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்க மாநாட்டு மேடையில், தனது 16ஆவது வயதில் பேசியபோது, தந்தை பெரியார் அவர்களால் ‘ஆரிய சங்காரன்’ என்று பெயரிடப்பட்டவர்.

1948ஆம் ஆண்டில் மும்பைக்கு குடிபெயர்ந்த இவர், 1951ஆம் ஆண்டு தி.மு.கழகத்தில் இணைந்து, தாராவி கிளைக் கழகச் செயலாளர், மும்பை தி.மு.க. செயலாளர், பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்

மராட்டிய மாநில ஆட்சியாளர்களிடம் கழகத்தின் சார்பில் நல்லுறவு கொண்டு மும்பைவாழ் தமிழ் மக்களுக்கு அளப்பரிய நன்மைகள் செய்து, மும்பை பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

2013ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் ‘‘பெரியார் விருது” வழங்கிச் சிறப்பித்தார் தலைவர் கலைஞர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

நெல்லை கிழக்கு மாவட்டத்தில்

## வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

### இரா.ஆவுடையப்பன் - கம்பம் பாண்டியன்- சிங்காரவேல் சிறப்புரை!

*நெல்லை.ஜன.29-*

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக் கூட்டம் வள்ளியூர் கலையரங்க திடலில் வள்ளியூர் பேரூர் கழகச் செயலாளர் சேதுராமலிங்கம் தலைமையில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் சீனிவாசன் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு வரவேற்புரை யாற்றினார்.

நிகழ்ச்சியை துணை அமைப்பாளர் லட்சுமணன் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் கம்பம் பாண்டியன், தலைமை கழகப் பேச்சாளர் சிங்காரவேல் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை யாற்றினர்.

நிகழ்வில் மாவட்ட அவை தலைவர் ம.கிரகாம் பெல், மாநில தொண்டர் அணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாவட்டப் பொருளாளர் ஜார்ஜ் கோசல், மாவட்ட துணை செயலாளர்கள் நம்பி, மைக்கேல், தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக், பொதுக்குழு உறுப்பினர்கள் ராமச்சந்திரன், கனகராஜ் பரமசிவ ஐயப்பன், ஒன்றியச் செயலாளர்கள் ஜோசப்பெல்சி, சேவியர் செல்வராஜா, ஜெகதீஸ், சுடலைக்கண்ணு, செல்வ கருணாநிதி, ராஜன், நகரச் செயலாளர்கள் கணேசன், மணி சூரியன், பேரூர் செயலாளர்கள் ஜான் கென்னடி, கசமுத்து, வள்ளியூர் பேரூராட்சி தலைவர் ராதா ராதாகிருஷ்ணன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் இளைஞர் அணி ஜான் ரபீந்தர், வழக்கறிஞர் அணி செல்வ சூடாமணி, விவசாய அணி மாடசாமி, மகளிர் அணி மல்லிகா அருள், தகவல் தொழில் நுட்ப அணி பிரேம் ஆனந்த்,

கோபாலக்கண்ணன், அருண் தவசுப்பாண்டியன் உள்பட கழக நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் பிரபாகரன் நன்றி உரை யாற்றினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா. வெற்றிகொண்டான்

**சனவரி 29 (2011)**



பேரறிஞர் அண்ணாவின் தென்றல் நடை மேடைப் பேச்சாலும் – தலைவர் கலைஞர் அவர்களின் கனித்தமிழ்ப் பேச்சாலும் ஈர்க்கப்பட்டு, தனது இளம் வயதிலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டவர்.

தலைவர் உடன்பிறப்புகளுக்கு எழுதிவரும் கடிதங்களால் உந்தப்பட்டு எழுதும் ஆற்றல்பெற்று கட்டுரையாளராகவும் – “பொழுது விடியும்” எனும் நாடகத்தை எழுதி, இவரே நடித்தும் – ‘கண்ணியம்’ எனும் ஏட்டின் துணை ஆசிரியராகப் பணிபுரிந்தும் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர்.

கழகம், மக்களுக்காக நடத்திய அறப்போராட்டங்கள் பலவற்றில் பங்கு கொண்டு பலமுறை கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். குறிப்பாக நெருக்கடிகால ‘மிசா’ சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

கழக தீர்மானக்குழுவின் செயலாளராகவும் – தலைசிறந்த முன்னோடிப் பேச்சாளராகவும், தமிழகத்தின் பட்டிதொட்டியெல்லாம் கழகக் கருத்துக்களையும், தலைவரின் எண்ணங்களையும் பாமர மக்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் பரப்பி வந்தவரும் – தலைவர் கலைஞரின் இதயத்தில் நீக்கமற நிறைந்திருந்தவரும் – கழகத் தொண்டர்களின் மனத்திரையில் மறக்க முடியாதவருமான இவரது மறைவு குறித்து தலைவர் கலைஞர் அவர்கள் துயரத்தால் கண்களைக் கண்ணீர்க் குளமாக்கிக் கொண்டு எழுதிய வைர வரிகள்; “இருக்கின்றாய் நீ என்றைக்கும் கழகத்தோடு – அண்ணாவோடு – அவர்தம் தம்பியராம் எங்களோடு!”.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**




**விழுப்புரம் மாவட்டம் செஞ்சி, மயிலம், திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட**

1.சத்தியமங்கலம் வட்டார பொது சுகாதார மருத்துவமனையில் கூடுதல் கட்டிடம் ரூபாய் 50 லட்சம்.

2.அனந்தபுரம் மருத்துவமனையில் புதிய கட்டிடம் ரூபாய் 60 லட்சம்.

3.அனுமந்தை புற நோயாளிகள் பிரிவு கட்டிடம் ரூபாய் 30 லட்சம்.

4.ஓமந்தூர் புறநோயாளிகள் பிரிவு கட்டிடம் ரூபாய் 30 லட்சம்.

5.ஓலக்கூர் செவிலியர் குடியிருப்பு ரூபாய் 25 லட்சம்.

6. புறங்கரை, கோவில் புறையூர், மேல் ஓலக்கூர், பாங்கொளத்தூர், வைரபுரம் ஆகிய இடங்களில் துணை சுகாதார நிலைய கட்டிடம் ரூபாய் 1 கோடி.

**என மொத்தம் ரூபாய் 2.90 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய மருத்துவ கட்டிடங்கள்.**

**விழுப்புரம் மாவட்டம் விழுப்புரம், வானூர் விக்கிரவாண்டி தொகுதிக்கு உட்பட்ட**

1.விழுப்புரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூபாய் 6 லட்சம் மதிப்பீட்டில் பச்சிளம் குழந்தைகளின் செவித்திறன் கண்டறிவதற்காக ஒலி உட்புகா அறை கட்டிடம்.

2.ரூபாய் 20 லட்சம் மதிப்பீட்டில் மூன்றாம் பாலினத்தவருக்கான ஆலோசனை பிரிவு கட்டிடம்.

3.ரூபாய் 67.13 லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் சிறப்பு பச்சிளம் குழந்தை பராமரிப்பு பிரிவு கட்டிடம்.

4.கிளியனூர் வட்டார சுகாதார மையத்தில் புதிய கட்டிடம் ரூபாய் 50 லட்சம்.

5.கல்பட்டு, திருசிற்றம்பலம், வி.புதூர் ஆகிய பகுதிகளில் ரூபாய் 70 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடங்கள்.

**என மொத்தம் ரூபாய் 2.13 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய மருத்துவ கட்டிடங்கள்.**

## மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்க வருகை தரும்

மாண்புமிகு **மா.சுப்பிரமணியன்** B.A.,LLB.,

மருத்துவம் - மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர்
மாவட்ட கழக செயலாளர்

மாண்புமிகு **செஞ்சி K.S.மஸ்தான்**

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்
விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர்

**ஆகியோரை வருக ! வருக !! என வரவேற்கிறோம்.**

**R.விஜயகுமார்** B.A.,B.L.,
செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர்
செஞ்சி ஒன்றிய செயலாளர் (கி) , தலைமை செயற்குழு உறுப்பினர்

**கண்மணி நெடுஞ்செழியன்**
மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர்

**அமுதா ரவிக்குமார்**
வல்லம் ஒன்றிய பெருந்தலைவர்
விழுப்புரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர்

**யோகேஷ்வரி மணிமாறன்**
மயிலம் ஒன்றிய பெருந்தலைவர்

**G.சொக்கலிங்கம்**
ஒலக்கூர் ஒன்றிய பெருந்தலைவர்,
ஒன்றிய செயலாளர் (கி)

**இரா.தயாளன்**
மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர்,
ஒன்றிய செயலாளர் (கி)

**நிர்மலா ரவிச்சந்திரன்**
திண்டிவனம் நகர மன்ற தலைவர்

**KSM.மொக்தியார் அலி மஸ்தான்**
தலைவர் – செஞ்சி பேரூராட்சி.

**V.முருகன்**
தலைவர் – அனந்தபுரம் பேரூராட்சி

**வேதநாயகி ஆளவந்தார்**
தலைவர் – மரக்காணம் பேரூராட்சி

JN ADS 9790242624 digital printing-Gingee

# விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க

முரசொலி பாசறை

# திராவிட மாடல் அரசு 53

**'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**






## எல்லோரும் இந்நாட்டு முதலாளிகளே!

"உபகாரம், பெறுபவருக்கும் தருபவருக்கும் இடையே ஏறத்தாழ 'அடிமை எஜமானன்' என்ற நிலையை உருவாக்கும். உரிமையோ, இருவருக்கும் சமநிலை, சம அந்தஸ்த்தைக் கொடுக்கும். உபகாரம், 'ஐயோ பாவம்' என்ற உணர்ச்சியின் விளைவு. உரிமை, 'ஏன்?' என்ற முழக்கத்தின் விளைவு" என்றார் பேரறிஞர் அண்ணா.

சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களை நினைத்துத்தான் அண்ணா இப்படிச் சொன்னார். சமூக நிலையில் சமநிலையை ஏற்படுத்த இட ஒதுக்கீட்டின் மூலம் திராவிட இயக்கம் தொடர்ந்து போராடி வருகிறது. அதே சமயம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைப் பொருளாதார ரீதியாக வலுப்படுத்தி, அவர்களுக்கு சம அந்தஸ்த்தைப் பெற்றுத் தரவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதில் ஒன்றுதான், அவர்களைத் தொழில்முனைவோர்களாக வளர்த்தெடுத்து, அவர்களை முதலாளிகளாக்குவது. அதற்காக 'தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ)' மூலம், பொருளாதார மேம்பாட்டுத் திட்டம், இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டம், இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டம் (மருத்துவம்), நிலம் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்பட்டு வந்தன.

அந்தத் திட்டங்கள் எல்லாம் ஒருங்கிணைக்கப்பட்டு, சமீபத்தில், 'முதலமைச்சரின் - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கான தொழில்முனைவுத் திட்டம்' என்ற புதிய திட்டமாக வடிவெடுத்துள்ளது. அதன் அடுத்த கட்டமாக, நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான 'திராவிட மாடல் அரசு', ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில்முனைவோருக்கான மாபெரும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தை நடத்தியுள்ளது.

### வரலாற்றில் முதன்முறை

சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில், ஜனவரி 26 மற்றும் 27 ஆம் தேதிகளில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்கான மாபெரும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் (TN BEAT EXPO-2024) நடைபெற்றது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலத்துறை சார்பாக, தென்னிந்திய வரலாற்றில் முதல்முறையாக தமிழ்நாட்டில் இந்தக் கண்காட்சியை தாட்கோ அமைப்பு நடத்தியுள்ளது. இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரால் தயாரிக்கப்பட்ட 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருட்கள், 410 அரங்குகளில் காட்சிப்படுத்தப்பட்டன.

### மின்னணு முதல் மூலிகைத் தேநீர் வரை

வணிக நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட மோட்டார் வாகன உதிரி பாகங்கள், இரசாயனப் பொருட்கள், மின் மற்றும் மின்னணுவியல், வேளாண்மைக் கருவிகள், கட்டுமானத்தொழில் சார்ந்தவர்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் என 187 அரங்குகளும், அரசு பொதுத்துறையைச் சார்ந்த நிறுவனங்களைக் கொண்ட 28 அரங்குகளும், தேசியமயமாக்கப்பட்ட மற்றும் தனியார் வங்கிகளுக்கு என 10 அரங்குகளும் ஒதுக்கப்பட்டிருந்தன.

வணிகர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு இடையே நேரடி விற்பனையை ஊக்குவிக்கும் விதத்தில் கைவினைப் பொருட்கள், மர உபயோகப் பொருட்கள், அணிகலன்கள், டெரக்கோட்டா பொருட்கள், உணவு மற்றும் குளிர்பானங்கள், இயற்கை உணவுத் தயாரிப்புப் பொருட்கள் போன்றவை 128 அரங்குகளில் அமைக்கப்பட்டிருந்தன.

இந்நிகழ்வில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து தொழில்முனைவோர் முதலீட்டாளர்கள், தொழில் அதிபர்கள், சுயதொழில் செய்பவர்கள், வர்த்தகர்கள் மற்றும் தொழில்துறையைச் சார்ந்த மாணவர்கள் கலந்துகொண்டனர்.

### முதலாளிகளை உருவாக்குவோம்

இந்தக் கண்காட்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில்முனைவோர்கள் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை வைத்துத் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்ள முடிந்தது. கண்காட்சிக்குப் பார்வையாளர்களாக வந்தவர்களிடம் சில்லறை விற்பனையை மேற்கொள்ள முடிந்தது மட்டுமல்லாமல், ஒன்றிய மற்றும் மாநில அரசு பொதுத்துறை, தனியார் துறையின் முன்னணி நிறுவனங்களிடமிருந்து தங்களின் தயாரிப்புகளுக்கான நேரடிக் கொள்முதல் செய்வதற்கான 'ஆர்டர்'களைப் பெறவும் வாய்ப்பு ஏற்பட்டது.

மேலும், அங்கு வந்த தொழில்முனைவோர் புதிய தொழில் தொடங்குவதற்கும், மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் பெறவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

தவிர, குறு, சிறு தொழிலாளர்கள் தயாரிக்கும் பொருட்களை வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது.

இன்னொரு பக்கம், தொழில்துறையில் சிறந்து விளங்கும் சிறப்பு வல்லுநர்களைக் கொண்டு தொழில்துறையில் இன்று ஏற்பட்டு வரும் மாற்றம், முன்னேற்றம், சவால்கள் போன்றவை குறித்து கருத்தரங்கமும் நடைபெற்றது.

"பணக்காரன், குளம் குட்டைக்குச் சமமானவன். மழை பெய்தால்தான் குளம், குட்டைகளில் நீர் இருக்கும். இன்றேல் வறண்டு விடும். முதலாளியோ ஊற்றுக்குச் சமமானவன். ஊற்று என்றும் நீர் சுரந்துகொண்டே இருக்கும். ஆக, பணக்காரனை விட முதலாளியின் நிலை பொருளாதார வழியில் உயர்ந்தது" என்பார் அண்ணா.

அதைப் புரிந்துகொண்ட 'திராவிட மாடல் அரசு', முதலாளிகளை உருவாக்கி வருகிறது. சாதி ரீதியாக முடக்கப்பட்டவர்கள், இனி பார் போற்ற பவனி வருவார்கள்..!

**...சாதனை தொடரும்**

தாட்கோ மூலம் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வந்த நான்கு திட்டங்கள், 'முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவுத் திட்டம் (CM-ARISE - Chief Minister's Adi Dravidar and Tribal Socio Economic Development Scheme)' என்கின்ற பெயரில் 40 கோடி ரூபாய் செலவில் புதிய திட்டமாக செயல்படுத்தப்படுகின்றன.

இந்தத் திட்டத்தின்படி, ஆதிதிராவிடர்களுக்கான தனிநபர் திட்டத் தொகையில் முன்விடுப்பு மானியமாக விடுவிக்கப்படும் தொகை, 30 சதவிகிதம் என்பதிலிருந்து 35 சதவிகிதம் என்று உயர்த்தப்பட்டுள்ளது. அந்த மானியத் தொகை அல்லது அதிகபட்சமாக ரூ.3.50 இலட்சம், இதில் எது குறைவானதோ அது கடன் வழங்கும் வங்கிக்கு வழங்கப்படுகிறது.

போலவே பழங்குடியினருக்கு, திட்ட மதிப்பீட்டில் 50 சதவிகிதம் அல்லது ரூ.3.75 இலட்சம் இவற்றில் எது குறைவானதோ அந்தத் தொகை மானியமாகவும் வழங்கப்படுகிறது.

மேலும், 6 சதவிகிதம் வட்டி மானியத்தினை அரையாண்டுக்கு ஒருமுறை சம்பந்தப்பட்ட வங்கிகளிடமிருந்து பெற்று, ஒத்திவைப்புக் காலம் உட்பட முழுவதுமாகத் திரும்பச் செலுத்தும் காலம் வரை, வட்டி மானியம் பெறுவதற்கான தகுதிகளின் அடிப்படையில் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.





## பழந்தமிழர் பெருமை பரிசு பெற...

தேர்தல் ஆணையர்களைத் தேர்வு செய்யும் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அடங்கிய மூவர் குழுவிலிருந்து, உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியை மட்டும் நீக்கிவிட்டு, கேபினட் அமைச்சர் ஒருவரை இணைக்கும் சட்டத்தை சமீபத்தில் நிறைவேற்றியது ஒன்றிய அரசு. இத்தகைய பாரபட்சமான செயல்பாடுகளால் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களைப் பயன்படுத்தாமல் வாக்குச்சீட்டு முறையையே பின்பற்ற வேண்டுமென்று நாடு முழுவதும் இருக்கிற எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இத்தகைய வலியுறுத்தல்களுக்கு மத்தியில், டெல்லி குடியரசு தின அணிவகுப்பில் தமிழ்நாடு அரசால் வடிவமைக்கப்பட்ட பழங்காலத்துக் குடவோலை முறையைக் கருப்பொருளாகக் கொண்ட அலங்கார ஊர்தி, மிகப்பெரிய கவனம் பெற்றிருக்கிறது. இந்தக் குடவோலை முறையே வாக்குச் சீட்டு முறைக்கு முன்னோடியாக இருந்தது. இந்த அலங்கார ஊர்தி, அணிவகுப்புக்கான பரிசை வெல்ல 77382-99899 என்ற எண்ணுக்கு MYGOVPOLL 344521, 14 எனக் குறுஞ்செய்தி அனுப்புமாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறது தமிழ்நாடு அரசு. வெல்ல வைப்பது நம் கடமை..!

## ஃப்ளாஷ்பேக்



### மரியாதை சந்திப்பு!

2006-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, நன்னிலம் ஒன்றியத்துக்குத் தேர்தல் கால செயல்வீரர் கூட்டம் நடத்துவதற்காக இன்றைய கழகத் தலைவர் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தளபதியார் அவர்கள் வருகை தந்து எழுச்சியுரை ஆற்றினார். அதற்கு முந்தைய ஆண்டு, நன்னிலம் ரயில் நிலையம் அருகிலுள்ள, டீலக்ஸ் திரையரங்கத்தில் செயல்வீரர் கூட்டம் நடைபெற்றது. அப்போது நெசவாளர் அணி ஒன்றிய அமைப்பாளர் என்ற முறையில் தளபதி அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். அப்போது எடுக்கப்பட்ட இந்தப் படத்தில் அன்றைய மாவட்டச் செயலாளர் பூண்டி கலைச்செல்வன், சட்டமன்ற உறுப்பினர் மணிமாறன் ஆகியோரும் உள்ளனர்.


வளர்பிறை தாஜ்

**-டாக்டர்.வளர்பிறை தாஜ், சிறுபான்மை நல உரிமைப் பிரிவு, நன்னிலம் தெற்கு ஒன்றியம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033 –24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கலைஞரின் அரசியல் அரிச்சுவடி!

**1936-ஆம் ஆண்டு திருவாரூரில் உயர்நிலைப் பள்ளியில் சேரச் சென்றார் கலைஞர். இடமில்லை என தலைமை ஆசிரியர் மறுக்க, 'எதிரே உள்ள தெப்பக் குளத்தில் குதித்து விடுவேன்' என மிரட்டினார் கலைஞர். கலைஞரின் படிப்பார்வத்தைப் பார்த்து, ஐந்தாம் வகுப்பில் சேர்த்துக் கொண்டார் தலைமை ஆசிரியர். பாடப் புத்தகத்தில் இடம்பெற்றிருந்த பனகல் அரசரைப் பற்றிய சிறு நூலை, அந்த வகுப்பில் முழுமையாக மனப்பாடம் செய்தவர் கலைஞர் மட்டுமே. பனகல் அரசரைப் பற்றிய அந்த நூல்தான் கலைஞரின் அரசியல் அரிச்சுவடி.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 372




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.